**<u>MCOP.29 / 2024- PW1 .</u>**

**<u>திரு. லோகேஷ் த/பெ.அன்னையா</u>**

**<u>நாள்27.11.2025.</u>**

**சாட்சிக்கு தமிழ் தெரியாது என்றும் தெலுங்கு மட்டுமே தெரியும் என்பதால் இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரியும் வழக்கறிஞர் திரு.N.சூர்யா, B.A., B.L., Ms.No.500/2001 அவர்கள் சாட்சிக்கு தெலுங்கில் சொல்ல சாட்சி திரும்ப தெலுங்கில் சொல்லும் பதிலை அவர் தமிழில் மொழியாக்கம் செய்து இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார். இருதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரணை நடைபெறுகிறது. இருதரப்பு வழக்கறிஞர்களும் திரு.N.சூர்யா, B.A., B.L., Ms.No.500/2001 அவர்கள் மொழிப்பெயற்பதற்கு ஆட்சேபனை இல்லை என்பது தெரிவிக்கப்பட பிறகு குறுக்கு விசாரணை நடைபெறுகிறது.**

<u>குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் :</u>

நான் இருசக்கரவாகனத்தில் சென்றபோது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து எந்த இடத்தில் ஏற்பட்டது என்றால் அஞ்செட்டி ரோட்டில் ஏற்பட்டது. எந்த வண்டி என் மீது மோதியது என்றால் இருசக்கர வாகனம் மோதியது. அந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்றால் தேன்கனிக்கோட்டை டு அஞ்செட்டி ரோட்டில் நான் இடது புறம் செல்லும் போது பின்னால் வந்த வாகனம் இடித்துவிட்டது. விபத்து பற்றி யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது என்றால் என் தம்பி புகார் கொடுத்தார். எனது தம்பி விபத்தை நேரில் பார்த்தாரா என்றால் இல்லை. நான் திடீர் என பிரேக் போட்டதால் தான் பின்னால் வந்த வாகனம் மோதியது என்றும் அதனால் விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. எனது தம்பி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது எனது கவனக்குறைவை மறைத்து பின்னால் வந்த வாகனத்தின் மீது பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு நான் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதற்கு பிறகு நான் எங்கு சிகிச்சைஎடுத்தேன் என்றால் ஓசூர் சீனிவாச மருத்துவமனையில் சிசிச்சை எடுத்தேன். விபத்தில் எனக்கு எங்கு அடிப்பட்டது

என்றால் வலது காலில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிறந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் நீதிமன்றம் இறுதிஉத்தரவில் கழித்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ 11 மற்றும் ம.த.சா-ஆ.13 ஆகியவற்றை உரிய மருத்துவமனை மூலம் நிருப்பித்தால் தான் எனக்கு அந்த தொகை கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்பு நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் விவசாயம் மற்றும் மாடு வளர்த்து வந்தேன். எனது வருமாணத்தை காட்டுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**வழக்கறிஞர் திரு.N.சூர்யா, B.A., B.L., Ms.No.500/2001 அவர்கள் மொழிபெயர்த்து சொன்னதில் இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள்.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.